View metadata, citation and similar papers at core.ac.uk

brought to you by CORE

provided by UUM Repository

| | | | |
|---|---|---|---|
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 28 Jun 2016 | Language | Tamil |
| Circulation | 35,000 | Readership | 125,000 |
| Section | News | Color | Full Color |
| Page No | 1,13 | ArticleSize | 273 cm² |
| AdValue | RM 1,390 | PR Value | RM 4,169 |
| | | | |



# மேலவை உறுப்பினராக எஸ்.கே. தேவமணி பதவியேற்பு



**கோலாலம்பூர், ஜூன் 28–** மஇகாவின் துணைத் தலைவரான டத்தோ எஸ்.கே.தேவமணி மேலவை உறுப்பினராக நேற்று பதவி உறுதிமொழி எடுத்துக்கொண்டார். மேலவைத் தலைவர் டத்தோ எஸ்.ஏ.விக்னேஸ்வரன் முன்னிலையில் அவர் பதவி உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

நேற்று மாலையில் பிரதமர் டத்தோஸ்ரீ நஜீப் துன் ரசாக் புத்ரா ஜெயாவில் அமைச்சரவை மாற்றத்தை அறிவித்த போது பிரதமர் துறையின் துணை அமைச்சராக தேவமணி நியமித்ததை தொடர்ந்து அவர் மேலவை உறுப்பினராக பதவி ஏற்றார். இந்த நிகழ்வில் மஇகாவின் தேசிய தலைவர் டத்தோஸ்ரீ டாக்டர் எஸ்.சுப்ரமணியமும் கலந்து கொண்டார். மஇகாவை மேலும் வலுப்படுத்தும் வகையில் தேவமணியின் புதிய பதவி அமையும் என டாக்டர் சுப்ரமணியம் நம்பிக்கை தெரிவித்தார். அண்மையில் நடைபெற்ற 2 இடைத்தேர்தல்களில் தேசிய முன்னணிக்கான

13

## முதல் பக்கத் தொடர்ச்சிகள்...

### மேலவை உறுப்பினராக...

இந்திய சமூகத்தின் ஆதரவு அதிகரித்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

59 வயதுடைய தேவமணி இதற்கு முன் 2004ஆம் ஆண்டு கேமரன் மலை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளார். அந்த தேர்தலில் ஜசெகவைச் சேர்ந்த ஜெ.அப்பளசாமியை 6,260 வாக்குகள் பெரும்பான்மையில் வென்ற தேவமணி 2008ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் அந்த தொகுதியை தற்காத்துக் கொண்டார். 2008ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரை அவர் பிரதமர் துறை துணையமைச்சராக இருந்துள்ளார்.

2013ஆம் ஆண்டில் பேரா மாநில சபாநாயகராக அவர் பதவி ஏற்றார். இதனிடையே தமது புதிய பொறுப்பில் கவனம் செலுத்தும் பொருட்டு சபாநாயகர் பதவியில் இருந்து விரைவில் விலகவிருப்பதாகவும் அவர் சொன்னார். பிரதமர் துறையின் துணையமைச்சர் பொறுப்பில் சிறந்த முறையில் சேவையாற்றுவதற்கும் அவர் உறுதி கொண்டார். இந்திய சமூகத்தின் சமூக பொருளாதார நிலையை கவனித்து வரப்போவதாகவும் அவர் கூறினார். தான் துணையமைச்சராக இருந்தபோது பிரதமர் துறையில் பல்வேறு புதிய நிறுவனங்கள் இருந்ததாகவும் அவற்றுடன் இணைந்து சேவையாற்றப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

மலாயாப் பல்கலைக்கழகத்தில் மலாய் இலக்கியத் துறையில் இளங்கலை பட்டம் பெற்றவரான தேவமணி மலேசியா உத்தாரா பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றார். இதனிடையே, பிரதமர் துறையில் தமது பணிகள் குறித்து தாம் இன்னும் பிரதமர் டத்தோஸ்ரீ நஜீப் துன் ரசாக்கிடம் விவாதிக்கவில்லை என தேவமணி தெரிவித்தார்.

Powered by: isentia